வகுப்பு - 7

பாடம் : தமிழ்

# இயல் - 2

## குறு வினாக்கள்

**1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

காட்டுப்பூக்களுக்கு இணையாக கார்த்திகை விளக்குகளை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்.

**2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?**

மரம், தேன், மருந்து முதலிய பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும். எல்லாரும் கூடி மகிழ்ந்திடக் குளிர்ந்த நிழல் தரும்.

**3. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?**

- காக்கை
- குருவி
- மைனா
- கிளிகள் இன்னும் பெயரறியாப் பறவைகள் கொத்துவதினால் விழுந்த பழங்களைச் சிறார் பொறுக்கி எடுத்தனர்.
- அணில்களும், காற்றும் பழங்களை உதிர்த்துச் சிறுவர்களுக்கு உதவின.

**3. காடு – வரையறு.**

- மனித முயற்சியின்றி வளர்ந்த மரங்கள்
- செடி
- கொடிகள்
- புல்
- புதர்கள்
- பூச்சியினங்கள்
- பறவைகள்
- விலங்குகள்

போன்ற பல்லுயிர்களின் வாழ்விடந்தான் காடு. இடை, இடையே காட்டாறுகளும், நீரோடைகளும் இருக்கும்.

**4. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?**

யானைகள் பொதுவாய் மனிதர்களைத் தாக்குவது இல்லை. அவற்றின் வழித்தடங்களில் குறுக்கிடும்போதுதான் அவை மனிதர்களைத் தாக்குகின்றன.

**5. கரடி 'அனைத்துண்ணி' என வழங்கப்படுவது ஏன்?**

கரடி பழங்கள், தேன் போன்றவற்றை உண்பதற்காக மரங்களில் ஏறும்: உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல் ஆகியவற்றையும் தேடி உண்ணும். கரையான் அதற்கு மிகவும் பிடித்த உணவு. இவற்றால் கரடி அனைத்துண்ணி என்று வழங்கப்படுகிறது.

**6. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக?**

சில வகை மான்கள் :

- ☞ சருகுமான்
- ☞ மிளாமான்
- ☞ வெளிமான்
- ☞ புள்ளி மான்

**7. ஔகாரம் எப்போது குறைந்து ஒலிக்காது?**

'ஔ' என்னும் எழுத்து தன்னைக் குறிக்கும் போதும். அளபெடுக்கும் போதும் குறைந்து ஒலிக்காது. இரு மாத்திரை அளவிலேயே ஒலிக்கும்.

**8. ஔகாரம் எப்பொழுது முழுமையாய் ஒலிக்கும்?**

ஔ, வௌ என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரு மாத்திரை அளவில் முழுமையாய் ஒலிக்கிறது.

**9. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?**

ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும். ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

**10. மகரக் குறுக்கத்துக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.**

மருண்ம், போன்ம்

1. எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவிற்குப் பெயர் என்ன?
   மாத்திரை
2. தமக்குரிய கால அளவில் குறைந்து ஒலிக்கும் எழுத்துகளை எவ்வாறு அழைப்பர்?
   குறுக்கங்கள்
3. தனித்து வரும் இடங்களில் எத்தனை மாத்திரை பெறும்?
   இரண்டு

## சிறு வினாக்கள்

1. **'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.**

- பச்சை நிறம் உடைய மயில்கள் நடனமாடும்.
- பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும்
- அதனைக்கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும்
- நரிக்கூட்டம் ஊளையிடும்.
- மிகுந்த சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடை போடும்.
- பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும்.
- இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

2. **நாவல் மரம் பற்றி நினைவுகளாய்க் கவிஞர் கூறவன யாவை?**

கவிஞர், தம் இளவயதில் பார்த்த மரம் அது. அவர் வயதைத் தாண்டிய பின்பும் அம்மரம் அப்படியே இருந்தது. சிறுவர்கள் நாவல் மரத்தின் செங்காய்களைப் பார்த்துப் பரவசம் கொண்டனர். கருநீலக் கோலிக்குண்டுகளைப் போன்ற நாவற்பழங்களைப் பார்த்த போது அவர்கள் நாவில் நீர் ஊறியது. கிழே விழும் பழங்களைப்பொறுக்கச் சிறுவர்கள் அலைமோதினர். தம் தமக்கையருக்காகப் பெட்டியுடன் பழங்களைப் பொறுக்கச் சிறுமியர் ஓடிவந்தனர். இரவில் பழந்தின்னி வௌவால்கள் படையெடுத்து வந்தன. மரநிழலில் கவிஞர் மகன் கிளியாந்தட்டு விளையாடினான். இவையே நாவல் மரம் பற்றிய நினைவுகளாய்க் கவிஞர் கூறுவன.

3. **புலிகள் குறித்து நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

புலிகள் தனித்து வாழும் இயல்புடையவை. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லா. கருவுற்ற புலியானது தொண்ணூறு நாள்களில் இரு அல்லது மூன்று குட்டிகளை ஈனும். அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்ந்து வரும். அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்துத் தனியாய் வாழ அனுப்பிவிடும். புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின் வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை.

## சிந்தனை வினா

1. **காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக**

மரங்களுள் சில நமக்குக் காய்கனிகளைத் தருகின்றன, சில, மருந்துப்பொருள்களாய்ப் பயன்படுகின்றன. சில, மணப்பொருள்களைத் தருகின்றன.

மரங்கள் நாம் உயிர் வாழக் கரி வளியை உள்ளே இழுத்துக் கொண்டு உயிர்வளியை விடுகின்றன. இது மரங்கள் நமக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்.

மரங்கள் வெளிவிடும் குளிர்காற்று மேகங்கள் மீது படுவதால் அவை மழையைப் பொழிவிக்கின்றன.

தேக்கு, தேவதாரு, அகில், சந்தனம், குங்குமம் போன்ற மரங்கள் நமக்குப் பல வகைகளில் பயன்படுகின்றன.

மரவேர்கள் வெள்ளத்தினால் ஏற்படும் மண்ணரிப்பைத் தடுக்கின்றன. இவ்வாறு பலவகைகளில் பயன்படும் மரங்களுள்ள காட்டை அழித்துவிட்டால் மேற்கூறிய பயன்களை இழந்தவர் ஆவோம்.

மேலும் புலி, சிங்கம், யானை போன்ற விலங்குகளின் புகலிடம் மரங்கள் நிறைந்த காடுதான். ஆகவே, அக்காட்டை அழித்து விட்டால் அவ்விலங்குகள் நாட்டினுள் புக நேர்ந்து, பயிர்களுக்கும் மனித உயிர்களுக்கும் நாசம் விளையும்.

**1. பத்தியைப் படித்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதவும்**

கார்த்திகை விளக்குகள் போலக் காடு முழுவதும் மலர்கள் மலர்ந்திருக்கும். அவற்றைக் காணும் கண்கள் குளிர்ச்சி பெறும். காடு பலவகையான பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும். எல்லாரும் கூடி மகிழ்ந்திடக் குளிர்ந்த நிழல் தரும். அங்கே வசிக்கும் குரங்குகள் மரக்கிளைகளில் உள்ள கனிகளைப் பறித்து உண்ணும். மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும். அடர்ந்த காடு வழிச்செல்வோருக்குத் தடையாய் இருக்கும்.

1. காடு முழுவதும் எது மலர்ந்திருக்கும்?
2. காடு முழுவதும் காட்சியளிப்பவை எவை?
3. காடுகளினால் நமக்குக் கிடைக்கும் பயன்கள்?
4. குரங்குகள் எதை உண்டன?
5. வெயிலை மறைத்து நிழல் தருபவை யாவை?

**1. எதிர்ப்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.**

| **வினா** | - | **விடை** |
|---|---|---|
| 1. மகளிர் | x | ஆடவர் |
| 2. அரசன் | x | அரசி |
| 3. பெண் | x | ஆண் |
| 4. மாணவன் | x | மாணவி |
| 5. சிறுவன் | x | சிறுமி |
| 6. தோழி | x | தோழன் |

**1. பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக**

(எ – டு) : கண்ணகி சிலம்பு அணிந்தான்.

கண்ணகி சிலம்பு அணிந்தாள்.

1 கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.

கோவலன் சிலம்பு விற்கப் போனான்.

2. அரசர்கள் நல்லாட்சி செய்தார்.

அரசர்கள் நல்லாட்சி செய்தார்கள்.

3. பசு கன்றை ஈன்றன.

பசு கன்றை ஈன்றது.


4. மேகங்கள் சூழ்ந்து கொண்டது

மேகங்கள் சூழ்ந்து கொண்டன.

5. குழலி நடனம் ஆடியது

குழலி நடனம் ஆடினாள்.

1. **வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை அமைக்க.**




1. கல் 2. புல் 3. பல் 4. இலை 5. கலை 6. இயல்பு

7. கடல் 8. கடலை 9. தை 10. இழை 11. இல்லை 12. புயல்

13. புதையல் 14. இயல் 15. கதை.

1. **சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | தயிர் | கூடு | திடல் | பாட்டு |
| குருவி | கொய்யா | சோறு | பழம் | பறவை |
| விளையாட்டு | கூட்டம் | அவரை | போட்டி | காய் |

(எ.கா) : வாழை + காய் = வாழைக்காய்

1. தயிர் + சோறு = தயிர்ச்சோறு

| | | | | |
|---|---|---|---|---|
| 2. குருவி | + | கூடு | = | குருவிக்கூடு |
| 3. கொய்யா | + | பழம் | = | கொய்யாப்பழம் |
| 4. விளையாட்டு | + | போட்டி | = | விளையாட்டுப்போட்டி |
| 5. பாட்டு | + | போட்டி | = | பாட்டுப்போட்டி |
| 6. அவரை | + | காய் | = | அவரைக்காய் |
| 7. விளையாட்டு | + | திடல் | = | விளையாட்டுத்திடல் |
| 8. வாழை | + | பழம் | = | வாழைப்பழம் |
| 9. பறவை | + | கூட்டம் | = | பறவைக்கூட்டம் |
| 10. கொய்யா | + | காய் | = | கொய்யாக்காய் |

**1. விடுகதைகளுக்கு விடை எழுதுக.**

1. மரம் விட்டு மரம் தாவுவேன்˙ குரங்கு அன்று.
வளைந்த வாலுண்டு˙ புலி அன்று.
கொட்டைகளைக் கொறிப்பேன்˙ கிளி அன்று
முதுகில் மூன்று கோடுகளை உடையவன், நான் யார்?
விடை : அணில்

2. என் பெயர் மூன்று எழுத்துகளைக் கொண்டது.
முதலெழுத்தை நீக்கினால் மறைப்பேன்.
இரண்டாம் எழுத்தை நீக்கினால் குரைப்பேன்.
மூன்றாம் எழுத்தை நீக்கினால் குதிப்பேன். நான் யார்?
விடை : குதிரை.

3. வெள்ளையாய் இருப்பேன்˙ பால் அன்று.
மீன் பிடிப்பேன்˙ தூண்டில் அன்று.
தவமிருப்பேன்˙ முனிவரல்லர். நான் யார்?
விடை : கொக்கு.

## கடிதம் எழுதுக.

**நீங்கள் சென்று வந்த சுற்றுலாக் குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.**

பெயர்
விலாசம்

**ஆருயிர் நண்பா,**

வணக்கம், இங்கு அனைவரும் நலம். அங்கு அதுபோல் அப்பா, அம்மா, தங்கை, தம்பிகள் ஆகியோர் நலன் குறித்து எழுதுக.

நான் என் வகுப்பு மாணவர்களுடன் தஞ்சை நகர் சென்று வந்தேன். அது குறித்து இக்கடிதத்தில் எழுதுகிறேன்.

எங்கள் வகுப்பு மாணவர்கள் 30 பேருடன் வகுப்பாசிரியரும். தமிழாசிரியரும் கடந்த வாரம் புறப்பட்டுச் சென்றோம். காலை 5 மணிக்கெல்லாம் தஞ்சாவூரை அடைந்து, ஒரு விடுதியில் தங்கி பின்னர் ஆசிரியர்களுடன் தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலுக்குச் சென்றோம்.

மலைகள் இல்லா ஓர் இடத்தில் எவ்வளவு பெரிய கற்கோவில்! அதுவும் உலகப்புகழ் பெற்ற கோவில். ஒற்றைக்கால் நந்தி உள்ளங்கவர்ந்தது. இராசாராச சோழன் பெருமைக்கும், கலையின் அருமைக்கும் அ∴து ஒரு கலைக்களஞ்சியம். தஞ்சை சரசுவதி மகால், அறிவுக்கோவில், மருத்துவ அறிவியல் நூல்கள் அங்கு அதிகமாய் உள்ளன.

தஞ்சாவூர் பயணத்தின் நினைவாய்த் தலையாட்டிப் பொம்மை வாங்கிக்கொண்டு மறுநாள் காலை வீடு வந்து சேர்ந்தோம்.

இப்படிக்கு

உன் அன்பு நண்பன்
பெயர்.